செய்தி வெளியீடு எண்:233 நாள்: 26.04.2017

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், அடித்தட்டு குடிசைவாழ் மக்களின் குறைகளை நீக்கி அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க கொண்டுவந்த தொலைநோக்கு திட்டம் – 2023ன்படி தமிழ்நாட்டை குடிசைப்பகுதிகள் இல்லாத மாநிலமாக 2023க்குள் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய அரசு “பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின் கீழ் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம்” ஜுன் 2015–ல் அறிவித்தது. அதன்படி, நாட்டிலுள்ள வீடற்ற மக்கள் அனைவருக்கும் 2022ம் ஆண்டிற்குள் வீடு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் வீட்டு வசதி தேவைகள் கணக்கெடுக்கும் பணி மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் முடிவுற்று, 8,03,790 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையென கண்டறியப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுமத்திடமிருந்து அதிக அளவில் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறுவதில் நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதுவரை, ரூ.7826.55 கோடி மதிப்பீட்டில் 2,21,692 வீடுகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சிறப்பான முறையில் அனைத்து நகரங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தும் நோக்கில், தேவையான தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட மாநில அளவிலான தொழில்நுட்ப குழு மற்றும் நகரங்கள் அளவிலான தொழில்நுட்ப குழுக்களை திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைத்துக் கொள்ள மத்திய அரசு வகை செய்துள்ளது. இதற்கான செலவில் 75:25 என்ற விகிதாச்சார அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் பங்களிக்கும். இதன்படி, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தேவைப்படும் பொறியாளர்கள் மற்றும் இதர வல்லநூர்களை ஒளிவுமறைவற்ற முறையில் நேரடி நியமனம் செய்ய மேல்நடவடிக்கை எடுத்தது.

64 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 17 இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்யும் பணி அண்ணா பல்கலைக் கழகத்திடம் வழங்கப்பட்டது.

நேரடி விண்ணப்பங்கள் மற்றும் வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம், கடந்த 29.01.2017 அன்று எழுத்துத் தேர்வு நடத்தி, அதில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் 1:5 என்ற விகிதாச்சாரத்தில் தேர்வானவர்களின் பட்டியலை முடிவு செய்தது. கடந்த, 13.03.2017 முதல் 17.03.2017 வரை தேர்வானவர்களிடம் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டது. இறுதியில் நடைமுறையிலுள்ள இடஒதுக்கீடு அடிப்படையில் தேர்வானவர்கள் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இந்நடவடிக்கையின் ஒவ்வொரு நிகழ்வின் முடிவும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே பழனிச்சாமி அவர்கள் இன்று (26.4.2017) தலைமைச் செயலகத்தில் தேர்வானவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. உடுமலை கே ராதாகிருஷ்ணன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலர் / மேலாண்மை இயக்குநர் திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9**
**நாள் : 26.4.2017**